ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
இணையதளம் : www.tnrd.gov.in.
தொலைபேசி : (044)-25670769
நிகரி: 044–25675849

**கடித எண். 7047 / மா.அ.தி.2 / 2010–1, நாள் 15.04.2010.**

அனுப்புநர்
க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை–15.

அய்யா,

பொருள் சாலைகள் – திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிபூண்டி வட்டம் – தேர்வாய் கண்டிகை கிராமம் – சிப்காட் தொழிற்பூங்கா இணைப்பு சாலைக்காக – எல்லாபுரம் ஒன்றியம் கே.பி.பி.சாலையில் சூளைமேணி முதல் செங்கரை வரையிலான 4.2 கி.மீ. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய சாலையினை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க அரசின் அனுமதி கோரியது – தொடர்பாக.

பார்வை தங்கள் கடிதம் ந.க.எண். 13373/2010/டியு1, நாள் 09.03.2010.

********

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. அக்கடிதத்தில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய் கண்டிகை கிராமம் சிப்காட் தொழிற் பூங்காவிற்கு இணைப்பு சாலைக்காக, சென்னை–புத்தூர் மாநில நெடுஞ்சாலை SH 51ல் எல்லாபுரம் ஒன்றியம் சூளைமேணி முதல் செங்கரை வரையிலான 4.2 கி.மீ. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றிய சாலையினை, மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க ஒன்றிய குழு தீர்மானம் எண்.308 நாள் 16.11.2009ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய குழு தீர்மான நகலுடன் மேற்படி சாலைக்கான வரைபடத்துடன் கருத்துரு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ளது என்று தெரிவித்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க தங்களால் அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

2. தங்களது கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின் கும்மிடிபூண்டி வட்டம், தேர்வாய் கண்டிகை கிராமம் சிப்காட் தொழிற்பூங்காவிற்கு

(த.பி.பா.)

இணைப்புச் சாலை, சென்னை–புத்தூர் SH 51 சாலையில் எல்லாபுரம் ஒன்றியம் கே.பி.பி.சாலை – செங்கரை (வழி) சூளைமேனி சாலை, 4.2 கி.மீ. நீளம், ஒரு வழிச் சாலையினை நான்கு வழிச் சாலையாக அமைத்திட நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க அரசு அனுமதி அளிக்கிறது என்பதைத் தெரிவிக்கப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

<u>நகல்:</u>
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவள்ளூர் மாவட்டம்,
<u>திருவள்ளூர்.</u>

நெடுஞ்சாலைத் துறை,
<u>சென்னை–9.</u>

தொழில்துறை,
<u>சென்னை–9.</u>

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
சிப்காட் நிறுவனம்,
<u>சென்னை–8.</u>